பக்கங்கள் - 06

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

மின்னிதழ்

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 19 புதன்கிழமை (02.06.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165



யாழைச் சேர்ந்த குடும்பஸ்தர்

## கொரோனாவால் சென்னையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை சென்னையில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் 02

வட மாகாணத்தில் நேற்று

## 105 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆய்வு கூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த 105 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக் 02

8 ஆயிரம்

## கொரோனா தொற்றாளர்கள் சமூகத்தில்

(கொழும்பு)

8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் தற்போது சமூகத்தில் நடமாடுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் 02

## கொரோனா பலி 43 +2,877 தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 43 பேர் 02

மக்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டால்

7ஆம் திகதிக்கு பின்னர்

# பயணத் தடை தளர்த்தப்படலாம்

பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண



(கொழும்பு)

**மக்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டால் நாடு முழுவதும் அமுலில் உள்ள பயணத் தடை 7ஆம் திகதி தளர்த்தப்படுவதற்கான அதிக சாத்தியங்கள் உள்ளதாக பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கூறியுள்ளார்.**

சிங்கள தொலைக்காட்சியில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எதிர்வரும் சில நாட்களில் மக்கள் செயற்படும் விதம், பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு முக்கிய காரணமாக அமையும் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். 02

## முள்ளியவளை மரக்காலையில் காவலாளி சடலமாக மீட்பு

(புனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியில் மரக்காலை ஒன்றில் காவலாளியாக கடமையாற்றி வந்த நபர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்த 02

கொரோனாவால்

## வவுனியாவில் பெண் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வயதான பெண் ஒருவர் கோவிட் தொற்று நோயால் நேற்று மரணமடைந்துள்ளார். 02

மக்களை நடமாட்டத்துக்கு அனுமதித்தால்

## நாட்டில் மீண்டும் கொரோனா கொத்தணிகள் உருவாகும்

வைத்திய நிபுணர்கள் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

"கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக நாடு இரு வார காலம் முடக்கப்பட்டாலும்கூட நாட்டின் நிலைமைகள் மோசமானதாகவே உள்ளது. மக்களின் நடமாட்டத்துக்கு அனுமதித் 02

## நூலகம் எரிக்கப்பட்டு 40 ஆண்டுகள்; நினைவேந்தலுக்கு பொலிஸார் தடை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டு நேற்றுடன் 40 ஆண்டுகள் நிறைவடைந்தன.

இந்த நிலையில், நூலகம் எரிக்கப்பட்ட நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். மாநகர சபையினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பொது நூலகத்தில் இடம்பெறவிருந்த நிலையில், பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. 02

## சீனாவின் மற்றுமொரு கோவிட் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகாரம்

(கொழும்பு)

சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிக்கு அண்மையில் உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகாரமளித்த நிலையில் தற்போது மற்றுமொரு சீன தயாரிப்பு கோவிட் தடுப்பூசிக்கு அங்கீகாரமளித்துள்ளது.

இந்நிலையில், சீனா தயாரித்துள்ள 02

## வவுனியாவில்...

குறித்த நபர் சுகயீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றைய தினம் மரணமடைந்துள்ளார்.

பூனாவைப் பகுதியைச் சேர்ந்த 52 வயதான பெண்ணே மரணமடைந்தவராவார். (ம-3,299)

## பலி 43...

கொரோனாவால் பலியாகியுள்ளனர்.

மேலும் 2,877 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் 189,241 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## கொரோனாவால்...

தெரியவருகையில்,

இலங்கையில் நிலவிய போர்க்கால நெருக்கடிகள் காரணமாக குடும்பத்துடன் புலம்பெயர்ந்து தமிழ்நாட்டில் அகதியாக தஞ்சமடைந்த இவர் இராமேஸ்வரம் அகதிகள் முகாமில் வசித்து வந்திருந்தார்.

பின்னர் முகாமைவிட்டு வெளியேறி சென்னையில் குடியேறி தனியார் துறையில் தொழில் புரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில்தான் கடந்த ஒரு கிழமைக்கு முன்னதாக கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் யாழ்ப்பாணம், பாசையூரைச் சொந்த இடமாகக் கொண்ட டென்சில் ராஜ்குமார் என்ற இரண்டு குழந்தைகளின் தந்தையாவார். (ம-3)

## முள்ளியவளை...

நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 54 வயதுடைய இராமையா மகாதேவன் எனும் குறித்த காவலாளி மரக்காலை ஒன்றில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை உயிரிழந்த நிலையில் நேற்றுக் காலை அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காவலாளியின் உயிரிழப்பு தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,281)

## நாட்டில் மீண்டும்...

தால் மீண்டும் கொத்தணிகள் உருவாகும் அச்சுறுத்தல் உள்ளது."

இவ்வாறு சுகாதார, வைத்திய நிபுணர்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை அமைக்கவும் அரசிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாராந்த கொரோனா ஆய்வுக் கூட்டங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், இறுதியாக நடைபெற்ற கூட்டத்தில் நாட்டின் மோசமான கொரோனா வைரஸ் பரவல் குறித்த ஆய்வொன்றை அரசிடம் சுகாதாரத் தரப்பினர் முன் வைத்துள்ளனர்.

அதற்கமைய நாடு தற்போது முடக்கப்பட்டுள்ள போதிலும் நாட்டில் வைரஸ் பரவல் குறைந்துள்ளதாகக் கருத முடியாது.

எனவே, மக்களின் நடமாட்டம், அநாவசிய செயற்பாடுகள் காரணமாக மீண்டும் நாட்டில் கொரோனாக் கொத்தணிகள் உருவாக அதிக வாய்ப்புகள் உள்ளன என்று அரசுக்குச் சுகாதாரத் தரப்பினர் எடுத்துரைத்துள்ளனர்.

நாட்டைத் தொடர்ச்சியாக முடக்குவது அல்லது சகலருக்கும் தடுப்பூசிகளை ஏற்றுவது ஆகிய இரண்டு செயற்பாடுகளில் ஒன்றைக் கையாள வேண்டும் என்பதையும் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

அயல் நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மேலாக நாடு முழுமையாக முடக்கப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் நாடு திறக்கப்பட்ட பின்னர் இன்று உலகிலேயே அதிக கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ள நாடாக இந்தியா மாறியுள்ளது.

எனவே, நாட்டை முடக்குவதால் மாத்திரம் கொரோனா வைரஸ் பரவலில் இருந்து தப்பிக்க முடியாது என்ற காரணிகளையும் அரசிடம் சுகாதாரத் தரப்பினர் எடுத்துக் கூறியுள்ளனர். (ம-3)

## பயணத் தடை...

மக்கள் முகக் கவசங்களை அணிந்து, சமூக இடைவெளியைப் பின்பற்றி ஒழுங்கான சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்கும் பட்சத்தில் 7ஆம் திகதிக்குப் பின்னர் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய அனைத்து கடைகளையும் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறிருப்பினும் மக்கள் நடந்து கொள்ளும் விதத்தைக் கருத்திற் கொண்டே பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்துவது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ம-3)

## நூலகம் எரிக்கப்...

பயணத் தடைக் காலத்தில் நினைவேந்தல் நிகழ்வினை தடுக்கும் முகமாக யாழ்ப்பாண பொலிஸாரால் யாழ். நூலக பகுதி கண்காணிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர முதல்வர் நேற்றுக் காலை 9.30 மணியளவில் சுடரேற்றி குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற இருந்த நிலையில் யாழ்ப்பாண பொலிஸார் யாழ்.நூலகத்திற்குள் உள் நுழைய விடாது கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ம-3,33)

# முன்னாள் போராளி பொலிஸாரால் கைது

## புலிகளை மீளுருவாக்க முயற்சியாம்

(மட்டக்களப்பு)

முன்னாள் போராளிகள் ஜனநாயகக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பொருளாளர் நாகலிங்கம் பிரதீபன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பை மீள் உருவாக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போரதீவு பிரதேசத்தில் வைத்து நேற்று மாலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இவரை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3)

## பிறிமா உற்பத்தி செய்யும்

# கோதுமை மாவின் விலை 4 ரூபாயால் அதிகரிப்பு

(கொழும்பு)

பிறிமா நிறுவனம் உற்பத்தி செய்யும் கோதுமை மாவின் விலை நேற்று முதல் 4 ரூபாயால் அதிகரித்துள்ளதாக அந்த நிறுவனத்தின் முகவர்கள் தெரிவித்துள்ளனர்.




கொத்து ரொட்டி, தேங்காய் ரொட்டி, கிழங்கு ரொட்டி, முட்டை ரொட்டி, பிட்டு, இடியப்பம் மற்றும் பரோட்டா உள்ளிட்ட உணவுகள் இந்த கோதுமை மாவின் மூலமே தயாரிக்கப்படுகின்றன.

நுகர்வோரும் இந்த உணவுகளை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

50 கிலோகிராம் கோதுமை மாவின் விலையானது 2 ஆயிரத்து 150 ரூபாயாக காணப்பட்டதுடன் புதிய விலையானது 2 ஆயிரத்து 350 ரூபாயாக அதிகரித்துள்ளது. (ம-3)

## சீனாவின் மற்று...

"சினோவெக்" கோவிட் தடுப்பூசியை அவசர தேவைகளுக்காக பயன்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் தற்போது அங்கீகாரமளித்துள்ளது.

அதன்படி, சீனா தயாரித்துள்ள இரண்டாவது கோவிட் தடுப்பூசி சினோவெக் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 105 பேருக்கு...

கழக ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த 57 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூட முடிவுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் 48 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 28 பேர் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேர், பருத்தித்துறை ஆதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 9 பேர், யாழ்.போதனா வைத்தியசாலையில் 2 பேர், யாழ்.சிறைச்சாலையில் இருவர், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், முல்லைத் தீவு மாவட்டத்தில் 7 பேர், ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேர், முல்லைத் தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 பேர், பூநகரி சுகாதார வைத்திய அதி காரி பிரிவில் 4 பேர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர், வவுனியா மாவட்டத்தில் 5 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 3 பேர், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 பேர், செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் ஒருவர், மன்னார் மாவட்டத்தில் ஒருவர், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3,18,33)

## கொரோனா...

சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்று 33 ஆயிரத்து 140 கோவிட் நோயாளிகள் உள்ள நிலையில் அவர்களில் 8 ஆயிரம் பேர் அரச சிகிச்சை நிலையங்கள் அல்லது இடைநிலை சிகிச்சை மையங்களுக்கு பரிந்துரைக்கப்படாமல் சமூகத்தில் சிதறிக் கிடக்கின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-3)

உதவி பற்றி பேசுவோர் அதிகம்;
அதைச் செய்வோர் மிகக் குறைவு.
- டெனிகஸான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்களின் பிரச்சினைகளை என்னவென்று கேளுங்கள்!

கொரோனாத் தொற்று என்பது உலகம் முழுமையிலும் பரவி வருகின்ற ஒரு கொடிய வைரஸ் கிருமியின் தாக்கம்.

மனித உயிர்களைக் காவு கொள்ளக்கூடிய அந்தக் கொடிய நோயிலிருந்து மக்கள் சமூகத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாட்டை முடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டை முடக்குவதன் மூலமே கொரோனாத் தொற்றைத் தடுக்க முடியும் என்ற கட்டத்தில், உலக நாடுகள் அந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டியதாயிற்று.

நாட்டை முடக்குவதனால், ஏற்படக்கூடிய துன்ப துயரங்கள் கொஞ்சமல்ல.

அதிலும் குறிப்பாக பண்பாட்டுக் கலாசார விழுமியங்கள் அடியோடு பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளமையால் அதன் தாக்கம் பொதுமக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

உண்மை, உரிய காலத்தில் திருமணச் சடங்கைச் செய்து வைக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில் நொந்து போயுள்ள பெற்றோர்.

ஆலயத்தில் கொடியேற்றம் நடக்காமல் போய்விட்டதே என்ற மனக்குறை.

உயிரிழந்த நெருங்கிய உறவுகளுக்கு இறுதிக் கிரியைகளைச் செய்து இறுதி ஊர்வலத்தைச் சிறப்பாக நடத்த முடியவில்லையே என்ற மனப் பதட்டம். இத்தனைக்கும் மேலாக, கொரோனாத் தொற்றால் இறந்தவரின் முகத்தைக் கூடப் பார்க்க முடியாத அளவில் எங்கள் நிலைமை ஆகிவிட்டதே என்ற தீராக் கவலை என ஏகப்பட்ட மனவருத்தம் மக்கள் சமூகத்தைத் தீண்டியுள்ளது.

என்ன செய்வது என்று பெருமூச்சு விட்டால், நாட்டில் பயணத்தடை அமுலில் இருக்கும் போது, முக்கிய தேவை கருதி வெளியில் செல்பவர்கள் ஏதோ பயங்கரவாதக் குற்றத்தை இழைத்தவர்கள்போல படைத்தரப்பு கருதிக் கொள்வதும்,

பயண அனுமதி போன்ற சில பணிகளைப் பெற முற்படுகின்றபோது, அரச அதிகாரிகள் குறித்த நபர்கள் பயங்கரவாதத் தாக்குதலைச் செய்துவிடக் கூடும் என அஞ்சுவது போலவும் நடந்து கொள்வதைப் பார்க்கும் போது,

இதைவிட்ட கொடுமை வேறு ஏதுமில்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

அன்புக்குரிய அரச அதிகாரிகளே! பொது மக்களின் பிரச்சினைகள் என்னவென்று கேளுங்கள். முடிந்தால் அவர்களுக்கு உதவுங்கள். உங்களை பொதுமக்கள் மனதால் வாழ்த்துவார்கள். அதுவொன்றுபோதும் உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கு.

## வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு
# 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு இன்றுமுதல் வழங்க ஏற்பாடு
## அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

இன்றுமுதல் 5000 ரூபாய்கொடுப்பனவு மீண்டும் வழங்கப்படும் என அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று கொழும்பில்நடைபெற்றது.

இதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்று மற்றும் பயணக் கட்டுப்பாடு காரணமாக வருமானத்தை இழந்தவர்களும் குறித்த கொடுப்பனவு வழங்கப்படும்.

இதேவேளை சமூர்த்தி கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அந்த கொடுப்பனவுகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6)

## பாராளுமன்ற செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தம்

(கொழும்பு)

பாராளுமன்றின் அனைத்து செயற்பாடுகளும் இடைநிறுத்தம்

பாராாளுமன்ற வளாகத்தில் இயங்கி வந்த அனைத்து காரியாலயங்களினதும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது.

பயணக்கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 7ம் திகதி வரையில் அனைத்து காரியாலயங்களினதும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் பயணத் தடை அமுல்படுத்தப்பட்டு ள்ளதனால் பாராளுமன்ற அலுவலகங்களின் பணியாளர்களும் பணிக்கு சமூகமளிக்கத் தேவையில்லை என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி பாராளுமன்றில்பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் எவரும் கடமையில் ஈடுபடப் போவதில்லை.

இதேவேளை, எதிர்வரும் 8ம் திகதி பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. பாராளுமன்றை கூட்டுவது தொடர்பில் எதிர்வரும் 7ம் திகதி தீர்மானிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

### பலாலி விமான நிலைய
## அபிவிருத்திக்கு இந்தியாவிடமிருந்து 300 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

பலாலி சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக இந்தியாவிட மிருந்து 300 மில்லியன் ரூபா பெற்றுக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெ முத்திடப்படவுள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். குறித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (4-6)

### அவதானம்
## சிறார்களிடையே பரவும் புதிய வகை காய்ச்சல்

(கொழும்பு)

சிறார்களுக்கு இடையில் பரவி வரும் நோய் ஒன்றைபொரள்ளைரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா கண்டறிந்துள்ளார்.

இது ஒரு வகையான காய்ச்சல் நோய் எனவும் இந்த நோய் 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு அதிகளவில் ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கண், நாக்கு, தோல் என்பன சிவந்து போதல், மூட்டு வலி, மூட்டு வீக்கம், சருமத்தில் கொப்பளங்களல் ஏற்படுவது இந்த காய்ச்சல் நோயின் ஆரம்ப அறிகுறிகள் எனவும் தீபால் பெரேரா கூறியுள்ளார்.

இந்த நோய் அறிகுறிகள் அல்லது காய்ச்சல் என்பன 14 நாட்களுக்கு மேல் நீடித்தால் கட்டாயம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும்.

அத்துடன்இந்த நோயை கொவிட் தொற்று நோயின் பக்கவிளைவாகவும் கருத முடியும் எனவும் மருத்துவர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (4-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை 3ஆம் திகதி வியாழன்** காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில் சமயபுரம், தரணிக்குளம், ஆச்சிபுரம், ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம், மகாமயிலங்குளம், மதுராநகர், கல்நாட்டினகுளம், மூன்றுமுறிப்பு, பெரியகூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

நாட்டில் பய ணத் தடை அமுல்ப் படுத்தப்படும் நாட்களில் திட்டமிட்ட மின் தடங்கலானது மீள் பரிசீலனை செய்து மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உருமாறிய வைரஸ்களுக்கு பெயர் சூட்டிய WHO

(ஜெனிவா)

உருமாறியகொரோனா வகைகளுக்கு உலக சுகாதார அமைப்பு புதிய பெயர்களை அறி வித்துள்ள நிலையில், இந்தியா வில் முதலில் கண்டறியப்பட்ட B.1.617.2 கொரோனா வகை டெல்டா கொரோனா வகை என அழைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, பிரிட்டன் நாட்டில் கண்டறியப்பட்ட கொரோனா அல் பா என்று அழைக்கப்படும்.

தென் ஆப்பிரிக்காவில் முத லில் கண்டறியப்பட்ட கொரோனா பீற்றாஎன அழைக்கப்படும்.

மேலும், பிரேசிலில் கண்ட றியப்பட்ட வகை கபமா அமெரிக் காவில் கண்டறியப்பட்ட கொரோனா எப்சிலொன்என அழைக்கப்படும்.

இந்த ஆண்டு ஜனவரியில் பிலிப்பைன்ஸ் கண்டறியப்பட்ட கொரோனா தீட்டா என்று பெயரிடப்பட்டுள்ளது. (4-6)

# மே மாதத்தில் மாத்திரம் 806 கோவிட் மரணங்கள்



## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

**கடந்த மே மாதத்தில் மாத்திரம் இலங்கையில் கொவிட் - 19 வைரஸ் தொற்று காரணமாக 806 பேர் உயிரிழந்துள்ளனர்.**

ஏப்ரல் மாத இறுதி வரை இலங்கையில் கோவிட் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை 678 ஆக காணப்பட்டதுடன் அது மே மாதத்தில் ஆயிரத்து 484 ஆக அதிகரித்தது.

அத்துடன் மே மாதத்தில் மாத்திரம் 78 ஆயிரத்து 218 கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

மே மாதத்திற்கு முன்னர் இலங்கையில் கொவிட் மரணங்களில் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

அதேபோல ஏப்ரல் 14 தமிழ் - சிங்கள புத்தாண்டில் இருந்து இதுவரையான காலத்திற்குள் மொத்தமாக 880 கொவிட் மரணங்கள் சம்பவித்துள்ளன.

இந்த காலப்பகுதியில் மொத்தமாக 90 ஆயிரத்து 627 கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-6)

# 1,047 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 24 மணி நேரத்தில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 1,047 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோரை கைது செய்ய பொலிஸார் கடுமையான சோதனை நடவடிக்கையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# விமான நிலையம் திறப்பு;


## கட்டாரிலிருந்து இரு விமானம் வந்தடைவு

(கொழும்பு)

இலங்கையில் விமான நிலையங்களை மீண்டும் திறப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், கட்டாரிலிருந்து இரு விமானங்கள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை தரையிறங்கியுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

டோஹாவிலிருந்து கட்டார் ஏயர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் ஒன்று வெளிநாட்டு பயணிகள் உட்பட மொத்தம் 53 பேர் வந்ததாக விமான நிலைய அதிகாரிகள் உறுதிபடுத்தியுள்ளனர்.

அதேபோன்று, டோஹாவிலிருந்து வந்த ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான யுஎல் - 216 என்ற விமானத்தில் 116 பயணிகள் வந்திருந்ததாகவும் விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். (4-6)



**உலகளவில் கொரோனா**

தொற்று : 171,520,500

உயிரிழப்பு : 3,566,430

(நேற்றைய நிலவரம் )

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனாவைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி இன்று புதன் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சங்கானை நிகரையம்பதி சாமுண்டாதேவி சமேத அருள்மிகு ஞான வைரவர் கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவப்பிரம்மஸ்ரீ சந்திரஜனர்த்தனசர்மா அவர்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலி பரப்பாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (4-6)

### ஒரு மணி நேரமாவது

# ஆறுமுகத்தான்குளம் மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்குங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான்குளம் கிராமத்தில் குமுழமுனை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் குறைந்தது ஒரு மணித்தியாலம் பணியில் ஈடுபட வேண்டும் என கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் இ.கவாஸ்கர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆறுமுகத்தான் குளத்தில் 110 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன. இக்கிராமத்திற்கான பஸ் சேவைகள் நடைபெறுவதில்லை. இக்கிராமத்தில் இருந்து நான்கு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள குமுழமுனை பிரதேச வைத்தியசாலைக்கு ஆறுமுகத்தான் குளத்தின் மக்கள் குறிப்பாக சிறுவர்கள், முதியவர்கள், மகப்பேற்றிற்குரிய பெண்கள் நடந்து வருகின்றனர். ஆறுமுகத்தான் குளம் கிராம மக்கள் மிக வறுமையான நிலையில் போக்குவரத்து நெருக்கடிக்கு மத்தியில் நாள்தோறும் குமுழமுனை வைத்தியசாலைக்கு வருவது சிரமமாகக் காணப்படும் நிலையில் குமுழமுனை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் குறைந்தது ஒரு மணித்தியாலம் ஆறுமுகத்தான் குளம் கிராமத்தின் பொது மண்டபத்தில் வைத்திய சேவையினை வழங்க வேண்டும். இதற்கான அனுமதியினை முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுததிருதார். (4-6,350)

# அரசியல் கைதிகள் விடுதலை சம்பந்தமான அனைத்து ஆதாரங்களையும் சமர்ப்பிப்போம்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவிப்பு

(நெளுக்குளம்)

ஜநாவிடம் அரசியல் கைதிகளின் விடுதலை சம்பந்தமான அனைத்து ஆதாரங்களையும் நிச்சயமாக கொடுப்போம் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ்கட்சிகள் கூட்டாக இணைந்து அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தமை தொடர்பாக வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாங்கள் அரசியல் கைதிகள் அவர்களுடைய விடுதலை சம்பந்தமாக அடுத்த ஜனாதிபதி சந்திப்பிலே ஒற்றுமையாக சென்று குறித்த விடயம் சம்பந்தமாக பேச இருக்கிறோம்.

இலங்கை அரசானது ஜநா சபையினுடைய தீர்மானத்திலே இந்த அரசியல் கைதிகளுடைய விடுதலை சம்பந்தமாக கூறப்பட்டிருக்கிறது. அந்தவகையிலே நாங்கள் ஏற்கனவே இந்த மகஜர்களை உயர்ஸ்தானியங்களுக்கு கொடுத்திருக்கிறோம். இப்பொழுது அமைச்சர் தினேஸ்குணவர்த்தனவிடம் கொடுத்திருக்கிறோம்.

ஜநா சபையிலே இந்த வழக்கினுடைய பின்னணி என்ன? அல்லது வழக்குகளில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்னென்ன கட்டங்களில் அவர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்? என்பதை நாங்கள் நிச்சயமாக சாட்சிகளோடு, அங்கே சொல்ல வேண்டும்.

இந்த விடுதலை சம்பந்தமான ஒரு நிலைப்பாடு அதிலே இருக்கின்றபடியால் நாங்களும் அதற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அந்தவகையிலே நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களுக்கான விடுதலை சம்பந்தமான அனைத்து ஆதாரங்களையும் நிச்சயமாக கொடுக்க வேண்டும், கொடுப்போம் என தெரிவித்தார். (4-6,299)



# தடுப்பூசி ஏற்றலுக்கு தெரிவான பிரதேசங்கள்

| சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | இன்றைய தினம் தடுப்பூசி ஏற்றும் நிலையம் | 30வயதுக்கு மேற்பட்டோர் விவரம் |
|---|---|---|---|
| சங்கானை | வட்டுக்கோட்டை கிழக்கு (ஜே/157) | வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனை | 1000 |
| சாவகச்சேரி | கைதடி தெற்கு (ஜே/291) | கைதடி பிரதேச மருத்துவமனை | 775 |
| | நாவற்குழி மேற்கு (ஜே/294) | | 1142 |
| | சாவகச்சேரி நகரம் (ஜே/300) | | 677 |
| | சாவகச்சேரி வடக்கு (ஜே/303) | | 531 |
| | நுணாவில் கிழக்கு (ஜே/306) | | 640 |
| | மட்டுவில் வடக்கு (ஜே/313) | | 629 |
| | அல்லாரை (ஜே/322) | | 948 |
| | கச்சாய் (ஜே/324) | | 991 |
| | கொடிகாமம் வடக்கு (ஜே/326) | | 659 |
| | கொடிகாமம் மத்தி (ஜே/327) | | 1019 |
| | கொடிகாமம் தெற்கு (ஜே/328) | | 1017 |
| | உசன் (ஜே/329) | | 459 |
| | கரம்பகம் (ஜே/330) | | 316 |
| | மிருசுவில் வடக்கு (ஜே/335) | | 608 |
| | மிருசுவில் தெற்கு (ஜேஃ336) | | 358 |
| | குடமியன் (ஜே/337) | | 532 |
| யாழ்ப்பாணம் | வண்ணார்பண்ணை வடகிழக்கு (ஜே/100) | | 1305 |
| | கந்தர்மடம் வடகிழக்கு (ஜே/103) | | 1186 |
| | கொக்குவில் தெற்கு கிழக்கு (பகுதி) (ஜே/123) | | 101 |
| | திருநகர் (ஜே/67) | | 471 |
| | ரெக்கிளமேசன் மேற்கு (ஜே/69) | | 472 |
| | சுண்டிக்குளி வடக்கு (ஜே/76) | | 916 |
| | அத்தியடி (ஜே/78) | | 1191 |
| | சிராம்பியடி (ஜே/79) | | 662 |
| | கோட்டை (ஜே/81) | | 956 |
| | நாவாந்துறை தெற்கு (ஜே/84) | | 1222 |
| | அரியாலை தெற்கு மேற்கு (ஜே/93) | அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் திருமண மண்டபம் | 645 |
| | அரியாலை மத்தி (ஜே/95) | | 926 |
| | ஐயனார் கோயிலடி (ஜே/97) | | 1024 |
| காரைநகர் | காரைநகர் வட கிழக்கு (ஜே/47) | காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை | 969 |
| கரவெட்டி | கரவெட்டி மேற்கு (ஜே/363) | சிறி நாரதா வித்தியாலயம் | 1032 |
| | கரவெட்டி வடக்கு (ஜே/364) | | 433 |
| | துன்னாலை மத்தி (ஜே/373) | | 387 |
| | நெல்லியடி (ஜே/376) | | 679 |
| | நெல்லியடி கிழக்கு (ஜே/377) | | 860 |
| கோப்பாய் | கல்வியன்காடு (ஜே/259) | கோப்பாய் பிரதேச மருத்துவமனை | 1364 |
| | கோப்பாய் வடக்கு (ஜே/262) | | 1487 |
| | அச்சுவேலி வடக்கு (ஜே/285) | | 1115 |
| | அச்சுவேலி மேற்கு (ஜே/287) | | 1228 |
| நல்லூர் | அரியாலை மத்தி வடக்கு (பகுதி) (ஜே/94) | | |
| பருத்தித்துறை | பருத்தித்துறை (ஜே/401) | வட இந்து மகளிர் கல்லூரி) | 1169 |
| | பருத்தித்துறை (ஜே/402) | | 751 |
| | தும்பளை கிழக்கு (ஜே/405) | | 965 |
| | புலோலி வடகிழக்கு (ஜே/408) | | 589 |
| | புலோலி மத்தி (ஜே/409) | | 885 |
| சண்டிலிப்பாய் | உயரபுலம் (ஜே/132) | | 1601 |
| | ஆனைக்கோட்டை (ஜே/133) | | 1724 |
| | நவாலி வடக்கு (ஜே/134) | | 1784 |
| | மானிப்பாய் வடக்கு (ஜே/137) | | 765 |
| | மானிப்பாய் மேற்கு (ஜே/140) | சங்கானை பிரதேச மருத்துவமனை | 1342 |
| | பண்டத்தரிப்பு (ஜே/146) | | 1375 |
| | சில்லாலை தெற்கு (ஜே/149) | | 747 |
| | மாதகல் மேற்கு (ஜே/152) | | 959 |
| | பெரியவிளான் (ஜே/153) | | 673 |
| | இளவாலை (ஜே/155) | | 673 |
| தெல்லிப்பழை | தையிட்டி வடக்கு (ஜே/249) | ஊரணி மகா வித்தியாலயம் | 163 |
| | தையிட்டி தெற்கு (ஜே/250) | | 592 |
| | பலாலி வடக்கு (ஜே/254) | | 326 |
| வேலணை | புங்குடுதீவு வடக்கு (ஜே/27) | புங்குடுதீவு 4ஆம் வட்டாரம் காளி கோவில் மண்டபம் | 126 |
| | நயினாதீவு வடக்கு (ஜே/34) | சிவலப்பிட்டி சனசமுகநிலையம் | 531 |
| | | | |

# அதிகரித்த வரட்சி; குடிநீருக்கு நெருக்கடி

## மக்கள் அசௌகரியம்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கோணாவில் யூனியன்குளம் மற்றும் 8ம் கட்டை ஆகிய கிராமங்களில் தற்போது நிலவி வரும் வரட்சியினால் குடிநீர் நெருக்கடியை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பலகிராமங்களில்தற் போதுகுடிநீர் நெருக்கடி கானப்படுகின்றது. தற்போதைய வரட்சியான காலநிலை நிலவி வருகின்ற இந்நிலையில் கோணாவில் யூனியன் குளம் அக்கராயன் ஆரோக்கியபுரம் அமைதிபுரம் போன்ற கிராமங்களில் குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது.

வருடாந்தம் இவ்வாறு தொடர்ந்து குடிநீர் நெருக்கடியை எதிர்கொள்ளும் இந்த பிரதேசங்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு பெற்றுத் தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6,315)

# 20 ஏக்கர் நெற்செய்கைக்கு நீர் வழங்கப்படவில்லை

(அக்கராயன் )

கிளிநொச்சி அக்கராயனில் 20 ஏக்கர் வரையான வயல் நிலத்திற்கு நீர் வழங்கப்படாமையால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர் 2010ஆம் ஆண்டில் இருந்து குறித்த நிலப் பகுதியில் தொடர்ச்சியாக விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த நிலையில் மானாவாரி நிலம் என கூறி 20 ஏக்கர் வரையான நெற்செய்கை நிலத்திற்கு அக்கராயன் குளத்தில் இருந்து நீர் வழங்கப்படாததன் காரணமாக 20 ஏக்கர் நெற்செய்கை அழிவடையும் ஆபத்தினை எதிர்கொண்டுள்ளது.

கோணாவில் பகுதியில் இவ்வாறான மானாவாரி நிலமான 350 ஏக்கர் நிலத்திற்கு நீர் விநியோகம் இடம் பெறும் நிலையில் அக்கராயன் பகுதிக்கு நீர் வழங்கப் படாமை தொடர்பாக விவசாயிகள் கவலைத் தெரிவித்துள்ளனர். அது தொடர்பாக உரிய அதிகாரிகள் நெற்செய்கை நிலங்களைப் பார் வையிட்டு நீர் வழங்குவதற் கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தனர். (4-6,350)

# உதவித் திட்டங்கள் வழங்குவோர் மாவட்ட செயலகத்தில் அனுமதி பெறுங்கள்

## யாழ். அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போது நாட்டில் கோவிட் - 19 தொற்று பரவிவருகின்ற காரணத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட அல்லது முடக்கப்பட்ட பிரதேசங்களில் ( கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிற்கு ) வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களுக்கு உதவி வழங்குவதாகத் தெரிவித்து வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் சில தனி நபர்கள் அமைப்புக்கள் நிதி திரட்டி வருவதாக அறியப்படுகின்றது.

ஆயினும் இந்த உதவிகள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் சென்றடைவதில்லை எனவும் குறிப்பிட்ட சிலருக்கு எல்லா வழிகளிலும் கிடைக்கப்பெறுவதாகவும் பொது மக்களினால் அறியத்தரப்பட்டுள்ளது.

எனவே இதனை ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு உரியது என்பதால் அரசாங்க அதிபரின் கண்காணிப்பில் வழங்கப்படும் உதவிகளைத் தவிர்த்து வேறு மட்டங்களிலிருந்து கிடைக்கப்பெறும் உதவிகள் பிரதேச செயலாளருக்கு ஊடாக வழங்கப்படல்வேண்டும். என்பதுடன் மாவட்டச் செயலகத்தின் முன் அனுமதியைப் பெற்று வழங்கப்படவேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் அறிவித்துள்ளார்.

(4-6,33)

### அறிகுறியற்ற தொற்றாளர்கள்

# வீடுகளுக்கு அனுப்பப்படும்போது பி.சி.ஆர் சோதனை செய்யப்படாது

### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்



(கொழும்பு)

நாட்டில் இனங்காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களிடையே அறிகுறியற்ற தொற்றாளர்கள் 10 நாட்களின் பின்னர் வீடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இவ்வாறு அறிகுறியற்றவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்படும்போது அவர்களுக்கு கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளப்படாது எனவும் அவர் கூறினார்.

ஒருவருக்குக் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டு 6 நாட்களின் பின்னர், அவருக்கு நோய் அறிகுறிகள் வெளிப்படவில்லையெனில் அவரிடமிருந்து கொரோனா வைரஸ் பரவல் அடையாது எனவும் அவர் அறிவுறுத்தினார்.இதனால் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருபவர்களில் 10 நாட்களுக்கு மேலும் நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தாதவர்கள் கொரோனாப் பரிசோதனையின்றி சிகிச்சை மையங்களிலிருந்து வீடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், இவ்வாறு வீடுகளுக்கு அனுப்பப்படுபவர்கள் அவர்களின் வீடுகளில் 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அத்தோடு கொரோனாத் தொற்றுக்குள்ளான ஒருவரிடம் 14 நாட்களின்பின் மேற்கொள்ளப்படும் பரிசோதனையில் அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டால், அவரின் உடலில் வைரஸின் இறந்த கலங்கள் இருக்கலாம். எனினும் இதனால் ஏனையோருக்கு தொற்றுப் பரவாது. எனவே, இந்தக் காலப்பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனை செய்வது அவசியமற்றது எனவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ம-3)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு இன்று 5 ஆயிரம் ரூபாய்

(கொழும்பு)

சமுர்த்தி முத்திரை பயனாளிகளுக்கான கொரோனாக் கால கொடுப்பனவாகிய ரூபாய் 5 ஆயிரம் இன்று வழங்கப்படவுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கூட்டாக இணைந்து பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று இக் கொடுப்பனவை வழங்கவுள்ளனர்.(ம-3)

# குழந்தை உயிரிழப்பு; தாய், தந்தை கைது

### தொல்புரத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழில் குழந்தை உயிரிழந்த சம்பவம் தொடர்பில் குழந்தையின் தாய், தந்தை வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை தொல்புரம் பகுதியில் வசித்து வந்த மாத்தளையை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் பெற்றோர்களான தம்பதிகளே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த தாய் கடந்த 22 ஆம் திகதி வீட்டில் குழந்தை பிரசவித்துள்ளார். அதனை அடுத்து அவருக்கு அதிக இரத்தபோக்கு ஏற்பட்டமையினால், மூளாய் வைத்திய சாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சையின் போது குழந்தை பிரசவித்தீர்களா? என வைத்தியர்கள் கேட்டபோது, ஆரம்பத்தில் முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கியுள்ளார். இறுதியாக குழந்தை பிரசவித்ததை ஏற்றுக்கொண்டவர், குழந்தையை தூக்கும் போது கை தவறி விழுந்து உயிரிழந்து விட்டதாகவும், குழந்தையின் சடலம் வீட்டிலேயே உள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதனை அடுத்து வைத்தியர்கள் வீட்டாரிடம் குழந்தையின் சடலத்தை உடனடியாக வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பணித்தனர்.

குழந்தையின் சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதும், பிரேத பரிசோதனை மேற்கொண்ட போது குழந்தையின் தலையில் அடிகாயம் இருந்தமை உறுதியாகியது.

இந்நிலையில் குறித்த பெண் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வைத்திய சிகிச்சை நிறைவடைந்து வீடு திரும்பி இருந்தார். இந்நிலையில் நேற்றையதினம் மாலை அவர்களின் வீட்டுக்கு சென்ற வட்டுக்கோட்டை பொலிஸார் தம்பதிகளை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,33,104)

### முல்லைத்தீவு பகுதியில்

# கேரள கஞ்சாவுடன் இளைஞன் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சின்னாத்து பாலத்திற்கு அருகில் உள்ள படையினரின் வீதி சோதனை சாவடியில் இளைஞன் ஒருவர் கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு சின்னாத்து பாலத்திற்கு அருகில் உள்ள படையினரின் வீதி சோதனை சாவடியில் பயணித்த இளைஞன் ஒருவரிடம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 8 கிராம் கேரள கஞ்சாவுடன் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற முல்லைத்தீவு பொலிஸார் உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். (ம-3,281)

# சட்ட விதிமுறைகளை மீறி திருமண நிகழ்வு

### பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தலில்

(மட்டக்களப்பு)

கோறளைப்பற்று மத்தி. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் வாழைச்சேனை நான்காம்வட்டாரத்தில் சட்டவிதிமுறைகளை மீறி திருமணம் நடைபெற்ற தகவலையறிந்து கலந்து கொண்டவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கோறளைப்பற்று மத்தி. சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரீ.நஜீப்கான் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி. சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொரோனா தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் இவருடன் தொடர்பினை ஏற்படுத்தியவர்கள் விபரம் திரட்டப்படும் போது சட்டவிதிமுறைகளை மீறி நடைபெற்ற திருமணத்தில் கலந்து கொண்டதன் பிரகாரம் கலந்து கொண்ட அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தலுக்கு உள்ளான நபர்கள் அனைவருக்கும் இன்று புதன்கிழமை பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கோறளைப்பற்று மத்தி. சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ம-3)

# மூளாய் பகுதியில் கடை உடைத்து திருட்டு

### சந்தேகத்தில் ஒருவர் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் தெற்கு பகுதியில் உள்ள கடை ஒன்று நேற்று முன்தினம் உடைக்கப்பட்டு 45 ஆயிரம் ரூபாய் பணம் களவாடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும், மூளாய் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்று மதியம் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.அவர் குடு போதைப்பொருள் மற்றும் 41 ஆயிரம் ரூபாய் பணத்துடனும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,104)